**கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2024**

-----------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தகிதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.
நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிரயாத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு என்னால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயம் வெளியிடப்படுகின்றது.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் நிதியத்தை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்ப ஓய்வூதிய பொறுப்பிலிருந்து ஆண்டின் போது செலுத்திய ஓய்வூதியப் பணத்தை கழிக்கையில் கிடைக்கின்ற இறுதி மீதிக்கு 11 சதவீதத்தினைச் சேர்த்து ஓய்வூதியப் பொறுப்பினைக் கணிக்கும் ஒரு நடைமுறையானது திட்டத்தினால் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வந்திருந்தன. அதற்கிணங்க 2024-01-01 ஆந் திகதியீல் உள்ளவாறான ஆரம்ப மீதியாகிய ரூபா 5,532,349,026 தொகைக்கு கடற்றொழிலாளர் ஓய்வூதிய கொடுப்பனவு ரூபா 88,348,718 தொகையினைக் கழித்த மீதிக்கு 11 சதவீதமான ரூபா 598,840,034 வட்டியினைச் சேர்த்து இறுதி மீதியாக ரூபா 6,042,840,342 தொகை அடையாளங் காணப்பட்டிருந்தன. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பிரிவின் பிரகாரம் காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளாது அதற்கு முரணாக மேற்கூறியவாறு ஓய்வூதிய பொறுப்பினைக் கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டியிருத்தலினை கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | கடற்றொழில் ஓய்வூதிய பொறுப்பும் திட்டத்தின் கூட்டு ஆயுள் காப்புறுதி நிதியத்தின் வருடாந்த பொறுப்பும் காப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கடற்றொழிலாளர் ஓய்வூதிய பொறுப்பினை அதற்கிணங்க கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் கடைசியாக மேற்கொள்ளப்பட்ட காப்பீட்டு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு உரிய கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி பிணைமுறியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 429,486,430 ஆக இருந்துதுடன் அப்பெறுமதியில் 2023 ஆம் ஆண்டிற்கான திறைசேரி பிணைமுறியினை மதிப்பீடு செய்யும் போது மிகையாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்த பெறுமதியான ரூபா 16,520,221 கழிக்கப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான திறைசேரி | இந்நிலைமையினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுட்டிக் காட்டுகின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் திறைசேரி பிணைமுறி மதிப்பீட்டுக் பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுதல் |

| | | |
|---|---|---|
| பிணை முறிப் பெறுமதியானது அப்பெறுமதியால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. | | வேண்டும். |

### 1.5.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திட்டத்தின் முழு சொத:துக்கள் ரூபா 743,331,403 ஆகவும் முழு பொறுப்புககள் ரூபா 6,125,280,552 ஆகவும் காணப்பட்டதுடன் சொத்துக்களை மிகைத்த பொறுப்புக்கள் ரூபா 5,381,949,149 ஆகும். இப்பாதகமான நிலைமையானது திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பது தொடர்பாக பாதகமாக தாக்கமளித்துள்ளது. | இத்திட்டமானது சுய நிதியின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படாததுடன் தவணைப் பணத்தை தீர்மானிக்கும் போது அரசாங்க நிவாரணத்திற்கு உள்ளடக்கப்படுவதனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. அதற்கிணங்க வருடாந்தம் செலுத்த வேண்டிய ஓய்வூதிய பொறுப்பு அதிகரித்துச் செல்வதுடன் அதன் காரணமாக இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளுதல் அதிகரிக்கப்படவில்லை. | திட்டத்தின் முழு தேறிய சொத்துக்கள் மறைப் பெறுமதியாகுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம் | | | |
| (i) 3 ஆம் பிரிவு | 60 வயதினைப் பூர்த்தி செய்த 26,093 கடற்றொழிலாளர்களுக்கு ஓய்வூதயிம் கிடைக்காமை மற்றும் புதிய பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்ளல் இடம்பெறாமையால் திட்டத்தின் 3 ஆம் பிரிவின் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இத்திட்டம் கடற்றொழில் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதுடன் சபையினால் கடற்றொழிளாளர்களுக்கு பிரதிபலன்கள் செலுத்துதல் இடம்பெறுகின்றது. 60 வயதினைப் பூர்த்தி செய்த கடற்றொழிலாளர்களின் தகவல்களை | திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு முடியுமான வகையில் செயற்பாடுகள் திட்டமிடப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அமைச்சிற்கு அனுப்பிவைத்து உரிய கடற்றொழிலாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும் 2025 ஆம் ஆண்டிலிருந்து புதிய ஒரு திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 5(1) ஆம் பிரிவு | 18 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட எந்த கடற்றொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு தகமை இருந்தும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் திட்டத்திற்கு கடற்றொழிலாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது இத்திட்டத்திற்காக பங்களிப்பாளர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பாக 2438/13 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் புதிய ஆட்சேர்ப்பிற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதற்காக புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (iii) | 7 ஆம் பிரிவு | திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழிலாளர்கள் 60 வயதினைப் பூர்த்தி செய்கையில் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2007 சனவரியிலிருந்து 2017 திசெம்பர் வரையான காலப்பகுதி தொடர்பாக ஓய்வூதியம் வழங்கிய 141 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 4,240,063 மற்றும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது ஓய்வூதியம் வழங்கிய 56 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 1,320,447 ஆக மொத்தமாக ரூபா 5,560,510 நிலுவையான ஓய்வூதியமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான ஓய்வூதியத்தை எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 60 வயதினைப் பூர்த்திசெய்கையில் ஓய்வூதியம் வழங்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 11 ஆம் பிரிவு | ஓய்வூதியத்திற்கான தகமையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் பங்களிப்பாளர் மரணமடைகையில் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டவாறு கணிப்பீடு செய்யப்பட்ட மரணப் பணிக்கொடை செலுத்தப்படுதல் வேண்டும். சபை மரணப் பணிக்கொடைக்கான விண்ணப்பத்தை பெற்ற திகதியிலிருந்து மரணப் பணிக்கொடை செலுத்தும் நடைமுறை முடிவடைவதற்கு 3 மாதங்களிலிருந்து 42 மாதங்கள் வரையான காலமும் கடற்றொழிலாளர் மரணமடைந்த திகதியிலிருந்து மரணப் பணிக்கொடை செலுத்தும் நடைமுறை முடிவடைவதற்கு 5 மாதங்களிலிருந்து 193 மாதங்கள் வரையான காலமும் எடுத்திருந்தது. | கடற்றொழிலாளர் ஓய்வூதியத்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு சபையல் ஒரு ஊழியர் மாத்திரம் சேவையாற்றுவதுடன் எதிர்காலத்தில் புதிய திட்டத்தினை ஆரம்பிப்பதோடு போதிய ஊழியர்கள் திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டு ஊழியர்களுக்கு துரிதமாக இக்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதியத்திற்கான தகமையை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் மரணமடைநத பங்களிப்பாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மரணப் பணிக்கொடையை ஆகக் குறைந்த காலத்தில் செலுத்துதல் வேண்டும். |
| (v) | 13(ஈ) ஆம் பிரிவு | செலுத்தப்பட்ட பங்களிப்பு பணமானது மூன்று மாத பங்களிப்பு பணத்தின் அளவில் ஆகக் குறைந்தது 10 சதவீதமாக இருந்தும் 75 சதவீதத்திற்கு குறைாக இருக்குமாயின் அச்சான்றிதழ் முழுமையாக இரத்துச் செய்யப்படாததுடன பங்களிப்பு பணத்தை செலுத்தும் காலம் முடிவடைகையில் பங்களிப்பாளருக்கு அவரினால் செலுத்தப்பட்ட தேறிய பங்களிப்பு பணத்தின் அளவு சபையினால் நிர்மாணிக்கப்படுகின்ற வகையில் மீளச் செலுத்தப்படலாம். இத்திட்டத்தில் ஒரு காலாண்டிற்கு 1.64 சதவீதத்திற்கு உட்பட்டு தேறிய தவணைப் பணத்தின் மீதான வட்டியானது கடைசியாக தவணைப் பணம் செலுத்திய திகதி வரை மாத்திரம் கணிக்கப்படுவதுடன் அது சம்பந்தமாக ஒரு சட்டவிதி இருக்கவில்லை. | கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்ட அதிகாரச் சட்டத்தின் மூலம் தேறிய தவணைப் பணத்துடன் வட்டியை வழங்குவதற்காக சட்டரீதியான ஏற்பாடு காணப்படுவதுடன் அதற்கிணங்க ஒருகாலாண்டிற்கு 1.64 சதவீத வட்டி சதவீதம் கணிக்கப்பட்டு றேரிய தவணைப் பணத்துடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | தேறிய தவணைப் பணத்தின் மீது செலுத்தப்படுகின்ற வட்டிக்காக தேவையான சட்டவிதிகள் உருவாக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (vi) | 16 ஆம் பிரிவு | பங்களிப்பு பணத்தை சேகரித்தல் மற்றும் ஆவணங்களைப் பேணுவதின் பலவீனத்தின் காரணமாக தொடர்ச்சியான பத்து தவணைப் பணங்களுக்காக தவணைணைப் பணத்தை முறையாகச் செலுத்தாமையின் அடிப்படையில் ஒருபங்களிப்பாளர் பிரதிபலனை இழப்பது சம்பந்தமாக பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்துதல் மேற்கொள்ள முடியாதிருந்தது. | கடற்றொழில் ஓய்வூதிய திட்டம் கடற்றொழில் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதுடன் சபையினால் கடற்றொழிலாளர்களுக்கு பிரதிபலன்களைச் செலுத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது. 60 வயதினைப் பூர்த்தி செய்து பிரதிபலனுக்கு தகமை பெறுகின்ற கடற்றொழிலாளர்களின் தகவல்கள் அமைச்சுடன் ஒருங்கிணைந்து உரிய கடற்றொழிலாளருக்கு தெரியப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒரு பங்களிப்பாளரின் பிரதிபலன் இழக்கப்படுவது தொடர்பாக பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |
| (vii) | 20 ஆம் பிரிவு | திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஆலோசனைக் குழு 2016 நவம்பர் மாதத்தின் பின்னர் இன்றுவரை கூடியிருக்கவில்லை. | ஆலோசனைக் குழு கூட்டத்தினை நடாத்துவது தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் புதிய கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக உரிய அறிவுறுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனைக் குழுவினைக் கூட்டுவதற்கு இந்த ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிககிறேன். | கடற்றொழில் ஓய்வூதிய ஆலோசனைக் குழு நிர்ணயிக்கப்பட்ட வாறு கூட்டப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 சனவரி 27 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டு | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரித்த ஆளணி நடைமுறை இல்லாது | சபையின் அதிகாரச் சட்டத்திற்கு இணங்க சேவையாற்றுகின்ற | படிகளைச் செலுத்துவதற்காக திறைசேரியின் |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையின் 02(இ)(iii) ஆம் பந்தி | 04 உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய பிரிவில் பதில் கடமை படியாக மொத்தமாக ரூபா 483,879 மீளாய்சவாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | பதிவிநிலை உத்தியோகத்தர்களுக்கு கடற்றொழில் அமைச்சின் கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டத்தின் மேலதிக வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டத்தின் இந்த கடமைகளுக்காக தனியான ஒரு ஆளணி அங்கீகரிக்கப்படாமையின் காரணமாக இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்காக கடற்றொழிலாளர் ஓய்வூதிய ஆலோசனைக் குழு அங்கீகாரம், பணிப்பாளர் சபையின் அங்கீகாரம், விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் என்பவற்றின் அடிப்படையில் செலுத்தப்படுகின்ற படிக்கான பணம் கடற்றொழில் அமைச்சிடமிருந்து இச்சபைக்கு வழங்கப்பட்டது. அது 1991 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஓய்வூதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. | இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 482,727,810 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 425,104,832 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 57,622,978 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டிற்கான ஓய்வூதிய பொறுப்பு முன்னைய ஆண்டினை விட ரூபா 46,193,036 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 நவம்பர் 25 ஆந் திகதிய 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இந்நிதியம் கடற்றொழில் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தும் அமைச்சின் மூலம் நடாத்தப்பட்ட கனணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டங்களின் போது இந்நிதியம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் மூலம் இத்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களும் தயாரிக்கப்படுவதனால் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக இத்திட்டத்தினையும் உள்ளடக்கி கமத்தொழில் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது கவனித்துப் பார்க்கப்படும். | இந்நிதியம் தொடர்பாக கடற்றொழில் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டத்தில் பங்களிப்பினைப் பெற்றுக்கொண்டு 60 வயதினை மிகைத்து ஓய்வூதிய வயதினை அடைந்திருக்கின்ற 32,149 கடற்றொழிலாளர்களில் 26,093 கடற்றொழிலாளர்களுக்கு ஓய்வூதிய நலன்கள் வழங்கப்படவில்லை. | இத்திட்டமானது சுய நிதியினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படாததுடன் தவணைப் பணத்தை தீர்மானிக்கும் போது அரசாங்க நிவாரணத்திற்கு உள்ளடக்கப்படுவதனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. அதனால் இத்திட்டத்திற்காக புதிதாக சேர்த்துக்கொள்ளல் இடம்பெற்றிருக்கவில்லை.<br>எனினும் புதிய திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிலிருந்து சேர்த்துக்கொள்ளல் இடம்பெறும். இத்திட்டத்தில் முறைப்படியாக பணம் செலுத்துதலினை மேற்கொண்டுள்ள இடம்பெற்றுள்ள 60 வயதீனை பூர்த்தி செய்த பங்களிப்பாளர்களுக்கு பிரதிபலன்களை செலுத்துதல் மேற்கொள்ளப்படும். | நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பினைப் பெற்று பங்களப்பினை முறைப்படியாக செலுத்திய 60 வயதினைப் ¸ர்த்தி செய்த அனைத்து ஓய்வூதியக்காரர்களுக்கும் பிரதிபலன்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (இ) | கடற்றொழிலாளர்களின் ஆயுள் தரவுத் தகவல்களைப் பேணுதல் அல்லது நாளதுவரையாப் பேணுதல் இடம் பெறாமையின் காரணமாக ஓய்வூதியம் பெறுபவர்கள் உண்மையிலேயே உயிர் வாழ்கின்றார்களா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தப்படாது மீளாய்வாண்டின் போது ஓய்வூதியமாக ரூபா 88,348,718 செலுத்தப்பட்டிருந்தும் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | கடற்றொழிலாளர் ஓய்வூதியத்தினை செலுத்துதல் நடைமுறையினை இன்னும் சரியாக மேற்கொள்வதற்காக உரிய ஆயுள் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்காக கடற்றொழிலாளர்களின் தகவல்களை கடற்றொழில் அமைச்சிற்கு அனுபபுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வருகின்றது. | திட்டத்தின் ஆயுள் தரவுத் தகவல் முறைமையை தாமதமின்றி நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 06 மாதங்கள் தொடர்ச்சியாக கடற்றொழிலாளர் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத ஓய்வூதியக்காரர்களின் பெயர்களை மரணமடைந்துள்ளார்கள் என அல்லது அவ்வாறு பெற்றுக்கொள்ளாமைக்கு தாக்கமளித்துள்ள காரணத்தை உறுதிப்படுத்தி அப்பட்டியலையும் காரணத்தையும் குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ஓய்வூதியம் செலுத்துதல் பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | ஆலோசனைக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் உரிய கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதுடன் உரிய மீனவர்கள் முன்வருவார்களாக இருந்தால் கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஆயுள் தரவுத் தகவல்களை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் மாத்திரம் ஓய்வூதிய பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 60 வயது பூர்த்தியடைந்து தவணைப் பணத்தில் 75 சதவீத்தினை விட குறைவாகச் செலுத்தியுள்ள கடற்றொழிலாளர்களுக்கு தேறிய தவணைப் பணத்தை மீளச் செலுத்துவதற்கு 03 மாதங்களிலிருந்து 78 மாதங்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | இத்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக சபையில் ஒரு ஊழியர் மாத்திரம் சேவையாற்றுவதுடன் எதிர்காலத்தில் புதிய திட்டத்தினை ஆரம்பிப்பதோடு போதியளவு எண்ணிக்கையின ஊழியர்களை இணைத்துக்கொண்டு கடற்றொழிலாளர்களுக்கு துரிதமாக இக்கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடற்றொழிலாளர்களுக்கு தேறிய தவணைப் பணத்தை மீளச் செலுத்துதலினை ஆகக் குறைந்த காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஓய்வூதியத் திட்டத்தின் பிரதான (Master) கோவையின் (Excell Sheet) பிரகாரம் பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 64,117 ஆக இருந்த போதிலும் தரவு முறைமையின் பிரகாரம் பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 69,049 ஆகும். அதற்கிணங்க 4,932 கடற்றொழிலாளர்களின் வித்தியாசம் தொடர்பான சரியான தகவல் நிறுவனத்திடம் இருக்கவில்லை. | சபைக்கு ஒரு தகவல் முறைமையினை அறிமுகப்படுத்தும் போது மாவட்ட கடற்றொழில் விரிவாக்கல் பிரிவில் இருக்கின்ற விரிவாக்கல் உத்தியோகத்தர்களினால் அனுப்பிய அறிக்கையின் பிரகாரம் பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 69,049 ஆக இருந்த போதிலும் நாளதுவரையாக்கப்பட்ட சபைத் தகவல் முறைமையின் கணனிமயப்படுத்தியுள்ள சரியான எண்ணிக்கை 64,711 பங்களிப்பாளர்கள் மாத்திரமாகும். | பங்களிப்பாளர்கள் தொடர்பாக சரியான தகவல்களை உள்ளடக்கி அத்தகவல் முறைமை நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும். |